TAMIL தமிழர்
HERITAGE மரபியல்
CENTRE நடுவம்

5200 FINCH AVENUE EAST, TORONTO, ON M1V 5B8 • info@tamilheritagecentre.com • TAMILHERITAGECENTRE.COM

அன்பார்ந்த தமிழ்த் தேசப் பக்தர்களே,

இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எமது அன்பார்ந்த வணக்கங்களையும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழர் வரலாறு, செம்மொழி அறிவு, கலை, பண்பாடு மற்றும் பாரம்பரிய நினைவுச் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து மேம்படுத்தும் உயரிய நோக்குடன் தமிழர் மரபியல் நடுவம் உருவாக்கப்பட்டது.

இந்த உயரிய இலக்கை அடைவதற்கும், தமிழர் மரபையும் பெருமையையும் பிரதிபலிக்கும் மண்டபங்களையும் பாரம்பரிய நினைவுச் சின்னங்களையும் நிறுவுவதற்கும், தேசப்பற்றும் தமிழ்ப்பற்றும் கொண்ட உங்களது பேராதரவுடன், 2021 ஆம் ஆண்டு டுர்ஹாம் பிராந்தியத்தின் விற்பி (Whitby) நகரில் அமைந்துள்ள 470 Jeffery Street, Whitby, Ontario, L1N 9Y2 என்ற முகவரியில் ஒரு நிலப்பகுதி கொள்வனவு செய்யப்பட்டது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இத்திட்டத்தின் தற்போதைய நிலை, இதுவரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், திட்டம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து நன்கொடையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வெளிப்படையான முறையில் விளக்கமளிக்கும் நோக்கில் இந்த விசேட கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி கொள்வனவு செய்யப்பட்ட பின்னணி

குறித்த நிலப்பகுதியை கொள்வனவு செய்வதற்கு முன்னர், அதன் பயன்பாட்டுத் தகுதி மற்றும் அபிவிருத்தி சாத்தியங்கள் தொடர்பாக நகர நிர்வாக அதிகாரிகளுடனும், நகரசபை உறுப்பினர்களுடனும், துறையறிவு கொண்ட ஆலோசனை நிறுவனங்களுடனும் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, சம்பந்தப்பட்ட நிபுணத்துவ நிறுவனங்களில் ஒன்றினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், மொத்தம் 49 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட குறித்த நிலப்பகுதியில் சுமார் 5 ஏக்கர் வரையிலான பகுதி உடனடி கட்டிட அபிவிருத்திக்கு ஏற்றதாகவும், மேலதிக சோனிங் (Zoning) அனுமதிகள் பெறப்பட்ட பின்னர் குறைந்தது 12 ஏக்கர் வரையிலான நிலப்பகுதியை திட்டத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டு வர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி சாத்தியங்கள் குறித்த உறுதிப்பாடுகளின் அடிப்படையிலேயே சுமார் 4.5 மில்லியன் கனடிய டொலர் பெறுமதியில் குறித்த நிலப்பகுதி கொள்வனவு செய்யப்பட்டது.

இதன் தொடர்பில், "சோனிங் அனுமதிகள் முழுமையாகப் பெறப்படுவதற்கு முன்னர் ஏன் நிலம் கொள்வனவு செய்யப்பட்டது?" என்ற கேள்வி சிலரிடமிருந்து இயல்பாகவே எழலாம்.

இதற்கான பதில் என்னவெனில், முழுமையான சோனிங் அனுமதிகளுடன் கூடிய நிலப்பகுதிகள் இதுபோன்ற முக்கிய இடங்களில் மிகவும் உயர்ந்த விலையிலேயே கிடைக்கக்கூடியவை. எனவே, எதிர்கால அபிவிருத்தி சாத்தியப்பாடுகளை கருத்தில் கொண்டு, தமிழர் சமூகத்திற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிரந்தர மரபியல் மையத்தை அமைக்க வேண்டுமென்ற நீண்டநாள் கனவின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எமது கனவு - தமிழர் மரபியல் நடுவத்தின் நோக்கம்

கனடாவில் பல்வேறு இன, மத மற்றும் மொழிசார் சமூகங்கள் தமக்கென கலாசார மையங்களையும் சமூக மண்டபங்களையும் நிறுவியுள்ளன. ஆனால், உலகின் தொன்மையான நாகரிகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழருக்கென ஒரு பாரிய கலாசார மையம் இன்னும் இல்லாதது எமக்கு நீண்டகால கவலையாக இருந்து வந்தது.

தமிழர் மரபியல் நடுவம் என்பது ஒரு சாதாரண கட்டிடத் திட்டமாக அல்லாது, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களின் அடையாளத்தையும் மரபையும் எதிர்கால சந்ததியினருக்காக நிலைநிறுத்தும் ஒரு வரலாற்றுப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும்.

இத்திட்டத்தின் கீழ்,

- தமிழர் வரலாற்று மற்றும் பண்பாட்டு அருங்காட்சியகம்,
- ஆய்வு மற்றும் நூலக மையம்,
- கலாசார மற்றும் விழா மண்டபம்,
- முதியோர் பராமரிப்பு வசதிகள்,
- இளைஞர்களுக்கான சமூக மற்றும் கல்வி வளாகங்கள்,
- உள்ளக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகள்,
- பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவகங்கள்

போன்ற பல்வேறு கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

எதிர்பாராத சவால்

நிலக் கொள்வனவிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேலதிக தொழில்நுட்ப மதிப்பீடுகள், சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் பரிசீலனைகளின் அடிப்படையில், குறித்த நிலப்பகுதியின் பயன்பாட்டுத் திறனைப் பாதிக்கக்கூடிய சில வரையறைகள் அடையாளம் காணப்பட்டன.

குறிப்பாக, நில அமைப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்வு ,சுற்றுச்சூழல் சார்ந்த காரணிகள் மற்றும் நடைமுறையில் அமுல்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் விளைவாக, ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவிலான பயன்பாட்டை உறுதிப்படுத்துவது சாத்தியமற்றதாக இருக்கலாம் என எமக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த தகவல் எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியது. இதற்குப் பின்னால் வேறு காரணங்கள் உள்ளனவா என்பதை நாம் உறுதியாகக் கூற முடியாது.

இந்த நிலைமை, எமது கனவுத் திட்டத்தின் ஆரம்ப இலக்குகள் மற்றும் திட்டமிடப்பட்ட கட்டமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளை குறிப்பிடத்தக்க வகையில் பாதித்துள்ளது. அந்த நிலத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தகவல் எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியது. ஒரு ஏக்கர் நிலத்தில் எமது விரிவான திட்டங்களை நிறைவேற்ற இயலாது என்பதால், மிகவும் கனத்த மனதுடன் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

நிர்வாகத்தின் தீர்மானம்

தமிழர் மரபியல் நடுவத்திற்காக வடிவமைக்கப்பட்ட விரிவான செயற்திட்டங்களையும் கட்டமைப்புகளையும் கருத்திற் கொண்டு, தற்போதைய நிலவரத்தில் குறித்த நிலப்பகுதியில் திட்டத்தை அதன் ஆரம்ப வடிவில் செயல்படுத்துவது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருப்பதாக நிர்வாகம் மதிப்பிட்டுள்ளது.

எனவே, திட்டத்தின் முதன்மை நோக்கங்களையும் சமூகத்திற்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளையும் பாதுகாக்கும் வகையில், மாற்று வழிகளை ஆராய்வதற்கும் பொருத்தமான வேறு இடத்தில் திட்டத்தை முன்னெடுப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

நிதி நிலை

இந்த திட்டத்திற்காக ஏறத்தாழ 800-க்கும் மேற்பட்ட தேசப்பற்றாளர்கள் தங்களது உழைப்பால் ஈட்டிய பணத்தில் இருந்து சுமார் $870,000-ஐ நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

அதனைத் தவிர, தமிழர் மரபியல் நடுவத்தின் நிர்வாக உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் தங்களது சொந்த நிதியிலிருந்தும் அன்பளிப்புகளையும் கடன்களையும் வழங்கியுள்ளனர். மேலும், நிதி நிறுவனங்களிலிருந்தும் கடன்கள் பெறப்பட்டுள்ளன.

தற்போதைய நிலை

தமிழர் மரபியல் நடுவத் திட்டத்துடன் தொடர்புடைய நிர்வாக மற்றும் கட்டமைப்பு வேலைத்திட்டங்களையும் நாம் முன்னெடுத்திருந்தோம். ஆனால், ஏற்பட்டுள்ள இந்த எதிர்பாராத சூழ்நிலையின் காரணமாக அவை அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்த குறிப்பிட்ட நிலப்பகுதியில் தமிழர் மரபியல் நடுவத்தை நிர்மாணிக்கும் நோக்கம் தடைப்பட்டிருந்தாலும், எமது இலக்கு தடைப்படவில்லை.

தமிழர் மரபையும் பண்பாட்டு அடையாளத்தையும் எதிர்கால சந்ததியினருக்காக நிலைநிறுத்த வேண்டும் என்ற எமது உறுதியான நோக்கம் தொடர்கிறது. அதற்காக பொருத்தமான மாற்று நிலப்பகுதிகளை அடையாளம் காணும் பணிகளில் நாம் தற்போது ஈடுபட்டு வருகிறோம்.

எதிர்ப்புகளும் வெளிப்புற அழுத்தங்களும்

இங்கு முக்கியமான ஒரு விடயத்தை வெளிப்படையாகக் குறிப்பிடுவது எமது கடமையாகும்.

கனடா தமிழர்கள் தமது கூட்டு முயற்சியாலும் தியாகங்களாலும் உருவாக்கி 2025 மே 11 ஆம் திகதி திறந்து வைத்த தமிழ் இனஅழிப்பு நினைவகம், அதன் உருவாக்கம் முதல் இன்று வரை பல்வேறு எதிர்ப்புகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றது. சிறிலங்கா அரசுடன் இணைந்த தரப்புகளாலும், தமிழ்த் தேசிய உணர்வுகளுக்கு எதிராகச் செயற்படும் சில சக்திகளினாலும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற தளங்கள் ஊடாக தொடர்ச்சியான அவதூறு பிரச்சாரங்கள், விமர்சனங்கள் மற்றும் கருத்துத் திரிப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், நினைவகத்தை அச்சுறுத்தும் வகையில்

இடைக்கிடையே மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் பதிவாகியுள்ளன. இச்செயற்பாடுகள் தமிழர் வரலாற்று நினைவுகளைப் பாதுகாத்து நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன.

அதேபோன்று, ஒன்ராறியோ சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் மே 12 முதல் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்படும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் தொடர்பாகவும் பல்வேறு விமர்சனங்களும் எதிர்ப்புகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தைச் சுற்றி சட்டரீதியான சவால்களும் முன்வைக்கப்பட்டபோதிலும், தமிழர் சமூகத்தின் வரலாற்று நினைவுகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில், தமிழர் மரபியல் நடுவத் திட்டமும் பல்வேறு எதிர்மறைப் பிரச்சாரங்கள், தவறான தகவல் பரப்புரைகள் மற்றும் வெளிப்புற அழுத்தங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டிருக்கவில்லை என்பதையும் இவ்வேளையில் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

எமது திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இத்தகைய நடவடிக்கைகள் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவா என்ற கேள்விக்கு, சில சந்தர்ப்பங்களில் அவை குறிப்பிடத்தக்க சவால்களையும் தடைகளையும் உருவாக்கியுள்ளன என்பது எமது மனவருத்தத்திற்குரிய உண்மையாகும். திட்டத்தின் நிர்வாக மற்றும் நடைமுறைச் செயல்பாடுகளில் இவ்வாறான எதிர்மறை நடவடிக்கைகளின் தாக்கம் உணரப்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

மேலும், இந்தத் திட்டத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருந்த சில நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் தனிப்பட்ட வாழ்விலும் சமூக மற்றும் உளவியல் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சமூகத்திற்காக முன்னெடுக்கப்படும் பணிகள் இவ்வாறான தேவையற்ற தடைகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகும் போது, எதிர்காலத்தில் இளைஞர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்கள் இதுபோன்ற பொது நலத் திட்டங்களில் ஈடுபடுவதில் தயக்கம் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது.

எனினும், இத்தகைய சவால்கள் எமது நோக்கத்தையோ அர்ப்பணிப்பையோ தளரச் செய்யவில்லை. மாறாக, தமிழர் வரலாறு, பண்பாடு, மொழி மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பணியின் அவசியத்தை மேலும் ஆழமாக உணர்த்துகின்றன.

அதேவேளை, கருத்து வேறுபாடுகள் ஜனநாயக சமூகத்தின் இயல்பான அம்சங்களாக இருந்தாலும், அவை உண்மைகள், பொறுப்புணர்வு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம். தமிழர் சமூகத்தின் ஒற்றுமை, முன்னேற்றம் மற்றும் எதிர்காலச் சந்ததியினரின் நலனை முன்னிறுத்தும் வகையில், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

நன்கொடையாளர்களுக்கான உறுதியான அறிவிப்பு

புலம்பெயர் தேசத்தில் தமிழர் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் உயரிய நோக்கில், பொருளாதார நெருக்கடிகளுக்கும் தனிப்பட்ட சிரமங்களுக்கும் மத்தியிலும் இந்தத் திட்டத்துக்கு ஆதரவளித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நாம் தலைவணங்குகிறோம்.

நீங்கள் வழங்கிய நன்கொடைகள், வேறொரு பொருத்தமான இடத்தில் தமிழர் மரபியல் நடுவத்தை உருவாக்குவதற்காகவே பயன்படுத்தப்படும் என்பதை உறுதியளிக்கிறோம்.

இருப்பினும், திட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு, தாங்கள் வழங்கிய நன்கொடையை மீளப்பெற விரும்பும் நன்கொடையாளர்களின் எழுத்துமூல கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, நிர்வாகத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக தொகை மீளச்செலுத்தப்படும்.

நன்கொடை மீளச்செலுத்தலுக்கான கோரிக்கைகள், உரிய அடையாள ஆதாரங்கள் மற்றும் பரிவர்த்தனை விவரங்களுடன் எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த நிலைமையால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏமாற்றங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் எமது ஆழ்ந்த மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் மரபியல் நடுவம் என்பது ஒரு நிலப்பகுதியையோ அல்லது ஒரு கட்டிடத் திட்டத்தையோ மையமாகக் கொண்ட முயற்சி அல்ல. மாறாக, புலம்பெயர் தலைமுறைகளுக்காக தமிழர் வரலாறு, பண்பாடு, மொழி மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்து நிலைநிறுத்தும் ஒரு தலைமுறைக் கடமையாகும்.

அந்த உயரிய இலக்கை அடைவதற்கான எமது அர்ப்பணிப்பும் உறுதியும் தொடர்கின்றன. தற்போதைய சூழ்நிலைகள் திட்டத்தின் நடைமுறைப் பாதையில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும், அதன் அடிப்படை நோக்கத்திலும் எதிர்காலப் பயணத்திலும் எந்த மாற்றமும் இல்லை என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏற்பட்டுள்ள சிரமங்களாலும் தாமதங்களாலும் அக்கறை கொண்ட அனைவருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய மனவருத்தத்தை நாம் புரிந்துகொள்கிறோம். அதேவேளை, இந்த முயற்சியில் நம்பிக்கை வைத்து ஒத்துழைத்த அனைத்து நன்கொடையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியை மீண்டும் பதிவு செய்கிறோம்.

"இடம் மாறலாம்; இலக்கு மாறாது.

தடை வரலாம்; தமிழர் மரபின் பயணம் தொடரும்."

நன்றி.

தமிழர் மரபியல் நடுவம்
நிர்வாகம்.